20.10.2023

கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.

அமர்வு வழக்கு எண்.24/2016

அ.சா.14

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மணிகண்டன் | | |
| த/பெ | தண்டபானி | மதம் | |
| கிராமம் | அரியலூர் திருக்கை | தொழில் | |
| தாலுக்கா | விக்கிரவாண்டி | வயது | 45 /2023 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

முதல் விசாரணை

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்துபோன சரவணனை எனக்கு தெரியாது. ஆஜர் எதிரிகள் இருவரையும் எனக்கு தெரியாது. சரவணன் எவ்வாறு எப்போது இறந்தார் என்றும் எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுககு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது.)

அரசு தரப்பு குறுக்கு விசாரணை

போலீசார் இந்த வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள் என்றும், இந்த வழக்கில் இறந்துபோன சரவணன் த/பெ சண்முகம் என்பவர் கூட்டேரிப்பட்டு நடுகுப்பம் கிராமத்தில் வசித்து வந்தார் என்றும், அவர் எனக்கு மாமா முறை என்றும், அவர் ஸ்டவ் ரிப்பேர் செய்யும் தொழில் செய்து வந்தார் என்றும், அவருக்கும் சென்னை மதுரவாயலை சேர்ந்த 3வது எதிரி அன்பு என்ற அன்பழகன் த/பெ பலராமன் என்பவர் தன் மாமனார் ஊரான மேற்படி கூட்டேரிப்பட்டுக்கு வந்தவர் அவருக்கு நண்பரான சரவணன்

என்பவருடன் வெளியில் 12.4.2011ந் தேதி அன்று சென்றார்கள் என்று போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு, எதிரிகள் கேட்டுக்கொண்டதின்பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**-இல்லை

20.10.2023

கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.

அமர்வு வழக்கு எண்.24/2016

அ.சா.13

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பாபு | | |
| த/பெ | பாண்டுரங்கன் | மதம் | |
| கிராமம் | அரியலூர் திருக்கை | தொழில் | |
| தாலுக்கா | விக்கிரவாண்டி | வயது | 35 /2023 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

முதல் விசாரணை

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்துபோன சரவணனை எனக்கு தெரியாது. ஆஜர் எதிரிகள் இருவரையும் எனக்கு தெரியாது. சரவணன் எவ்வாறு எப்போது இறந்தார் என்றும் எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுகக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது.)

அரசு தரப்பு குறுக்கு விசாரணை

போலீசார் இந்த வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள் என்றும், இந்த வழக்கில் இறந்துபோன சரவணன் த/பெ சண்முகம் என்பவர் கூட்டேரிப்பட்டு நடுகுப்பம் கிராமத்தில் வசித்து வந்தார் என்றும், அவர் எனக்கு மாமா முறை என்றும், அவர் ஸ்டவ் ரிப்பேர் செய்யும் தொழில் செய்து வந்தார் என்றும், அவருக்கும் சென்னை மதுரவாயலை சேர்ந்த 3வது எதிரி அன்பு என்ற அன்பழகன் த/பெ பலராமன் என்பவர் அவருக்கு நண்பர் என்றும், அவரும் என் மாமாவும் ஒரே தொழிலை செய்து வந்தார்கள் என்றும்,

கடந்த 11.4.2011, 12.4.2011 இரண்டு நாட்களும் வீட்டில் இருந்தார்கள் என்றும், 2 பேரும் 12ந் தேதி இரவு 7 மணிக்கு ஊருக்கு போவதாக சொல்லி கிளம்பி சென்றார்கள் என்றும், 13.4.2011ந் தேதி விடியற்காலை அரியலூர் திருக்கை ஆனந்தம் நகர் பிளாட்டில் சரவணன் கொலை செய்யப்பட்டு கிடந்ததாக தெரியவந்தது என்றும், பிறகு விழுப்புரம் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையில் சரணவன் பிரேதத்தை அடையாளம் காட்டினோம் என்றும், கடைசியாக எங்கள் வீட்டில் இருந்து சரவணன் போகும்போது அன்பு தான் கூட போனார் என்றும், இது குறித்து காவல்துறை விசாரணையில் சொல்லிவிட்டு, எதிரிகள் கேட்டுக்கொண்டதின்பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**-இல்லை